தேவன் செய்த நன்மை ஏராளம்
அதை சொல்லி துதிப்பேன் எந்நாளும்
துதித்தலே என் இன்பமே ஏற்றதுமாய் உள்ளதே -2

தாயின் வயிற்றில் உருவாக்கினீர்
கர்பபத்திலே என்னை ஆதரித்தீர்
நீரே என்னை பிறக்க வைத்தீர்
இன்று வரை என்னை நடத்தினீர் -2

சோதனையை தாங்குகின்ற
பெலனை எனக்கு தந்தீரே
சோதனைக்கெல்லாம் தப்பித்துக்கொள்ளும்
வழியையும் நீர் காட்டினீர் -2

எனக்காய் யுத்தம் செய்தீரே
யுத்தத்தில் ஜெயமும் தந்தீரே
வில்லை ஒடித்து ஈட்டியை முறித்து
யுத்தங்களை ஓயப்பண்ணுகிறீர் -2

எத்தனை வருஷம் துன்பங்களோ
எத்தனை நாட்கள் சிறுமைகளோ
அதற்கு சரியாய் அதற்கு மேலாய்
மகிழ்ச்சியை நீர் தந்துவிட்டீர் -2

வாலாய் அல்ல தலையாக்கினீர்
கீழாய் அல்ல மேலாக்கினீர்
மேன்மையான கனத்துக்குரிய
பாத்திரமாய் மாற்றினீர் -2